**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 376 /2019 PW .3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பழனிவேல் ராஜன் | தந்தை/கணவர் பெயர்: மலைச்சாமி | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026

---

**(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. 1ம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>04.03.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மணப்புரம் Housing finance நிறுவனத்தில் மேனஜராக பணிபுரிகிறேன். அ.சா.1 ஏற்கனவே மணப்புரம் பைனான்ஸ் கம்பெனியில் வேலை பார்த்தார். தற்போது வேறு வேலைக்கு சென்று விட்டார் . 1ம் எதிரி மணப்புரம் பைனான்ஸ் நிறுவனத்தின் ஆடிட்டராக இருந்தார். 2வது எதிரி எங்கள் நிறுவனத்தில் உதவி கிளை மேலளாராக இருந்தார்.

2. நான் மணப்புரம் பைனான்ஸ் கம்பெனியில் 2017ம் வருடம் தணிக்கைபிரிவு அதிகாரியாக பணிபுரிந்த போது சிங்கம்புணரி மணப்புரம் பைனான்ஸ் கிளையில் தணிக்கை செய்வதற்காக என்னை அனுப்பி இருந்தார்கள் . அதன்படி 08.06.2017ம் தேதி சிங்கம்புணரி கிளை மணப்புரம் பைனான்ஸ் நிறுவனத்தில் தணிக்கை மேற்கொண்ட போது பாலகுரு என்ற கிளை மேலாளர் , சதீஸ் என்ற உதவி கிளை மேலளாரர் இருந்தார்.

3.அவர்கள் முன்னிலையில் வாடிக்கையாளர்களின் அடகு வைத்த நகைகளை பட்டியல்சாட்சி 2 விஷ்ணு சந்திரன், பட்டியல்சாட்சி 3 ஜித்தன் ஜானர்தனன் மற்றும் நான் ஆகியோர் தணிக்கை செய்தோம் . பட்டியியல் சாட்சி 2,3 தணிக்கை பிரிவு அதிகாரிகளாக இருந்தார்கள். வாடிக்கையாளர்கள் ஆசா, கருப்பாயி, செல்வராஜ், சாகுல் ஹமீது ஆகியோர்கள் அடகு வைத்திருந்த தங்க நகைகளை தணிக்கையில் சரிபார்த்த போது மொத்தம் நான்கு பேர்களின் நகைகளையும் சேர்த்து 101 கிராம், 900 மில்லிகிராம்

நகைகள் இருக்கவேண்டிய எடைக்கு பதிலாக கூடுதலாகவும், குறைச்சலாகவும் போலி நகைகளை உள்ளே வைத்து barcode ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தது. மேற்படி நான்கு வாடிக்கையாளர்களின் தனித்தனி அடகு வைத்திருந்த நகை அடகு விவரங்கள் ஆவணத்தை பார்த்த தான் தெரியும்.

4. இதற்கு முன்னால் 1ம் எதிரி 28.04.2017ம் தேதி கணக்கு தணிக்கை செய்துள்ள நிலையில் 2வது எதிரியும் உடன் இருந்திருக்கிறார். அந்த தேதியில் 2ம் எதிரியிடம் சாவி இருந்ததால் அவரும் 1ம் எதிரியும் சேர்ந்து, 28.04.2017 ம் தேதி தணிக்கை செய்திருந்தார். மேற்படி 4 வாடிக்கையாளர்களின் அடகு கடன்கள் 2017ம் ஆண்டு எங்கள் நிறுவனத்தில் வைக்கப்பட்டது தான். இது குறித்து நான் அ.சா.1 க்கு தகவல் தெரிவித்தேன். அதன்பிறகு அ.சா.1 நேரடியாக சிங்கம்புணரி மணப்புரம் பைனான்ஸ் கிளைக்கு வந்து எங்களிடம் விசாரித்த பிறகு நடவடிக்கை எடுத்து புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

5. நகை அடகு வைத்த 4 வாடிக்கையாளர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 4 வாடிக்கையாளர்கள் எந்ததேதியில் எவ்வளவு நகை அடகு வைத்தார்கள் என்ற விவரம் தெரியாது. நான் நகைகளை பரிசோதித்த போது தெரிய வந்தது. எனக்கு முன்பு ஆய்வு செய்த 1ம் எதிரி எங்கள் நிறுவனத்திலுள்ள நகைகளில் எவ்வித குறைபாடில்லை என்று சான்று வழங்கியுள்ளார் என்றால் சரிதான். போலீசார் 4 வாடிக்கையாளர்களை விசாரித்தார்களா என்றால் தெரியாது. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

6. நான் தணிக்கை செய்த தணிக்கை ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தில் ஏற்பட்ட குறை களை மறைப்பதற்காக எங்கள் நிறுவனத்திலிருந்து எதிரி மீது வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் நிரந்தர அப்ரேசர் யாரும் இல்லை. போலி நகை என்பதற்கு தணிக்கை சான்று எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் சரியல்ல. மேலாளர், உதவிமேலாளார், தணிக்கை அலுவலர் ஆகிய மூவரும் தான் லக்கரை திறந்து தணிக்கை செய்ய முடியும் என்றால் சரிதான்.

7. நான் தணிக்கை செய்யும் போது CCTV கேமரா இருந்தது. CCTV கேமரா இருக்க வேண்டும் என்பது நடைமுறை என்றால் சரிதான் . அன்றையை தினம் தணிக்கை செய்யப்பட்டது என்பதற்கு ஆவணம் போலீஸ் விசாரணையில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. உதவி மேலாளர் பணியில் நின்ற பிறகு பின்னால் வரும் மேலாளரிடம் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான் . லாக்கரிலிருந்து நகை எடுக்கும் போது அந்த லாக்கரியில் யார் நகை வைத்திருந்தார் என்று சொல்ல இயலாது . புது மேலாளர் பணியில் சேரும் போது எல்லா லாக்கர் ஆவணங்களை சரிபார்த்து எடுப்பது வழக்கம் என்றால் சரிதான்.

8. Bar code ல் யாருடையது கையொப்பம் உள்ளது என்றால் தினேஷ்குமார் கையொப்பம் உள்ளது. Bar code sticker தணிக்கை அலுவலர் கொண்டு வரமாட்டார். Bar code sticker மேலாளர் மற்றும் உதவி மேலாளர் பொறுப்பில் இருக்கும் . ஸ்டிக்கரை பிரித்து ஒட்டுவதற்கு வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை . நகைகளை யார் மாற்றினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. தணிக்கையாளர் நிரந்தர பணியாளரர் இல்லை என்றால் சரியல்ல.

9. புதிய மேலாளர் மேற்படி நகைகளை கஸ்டடியில் எடுக்க வாய்ப்பு உள்ளது . போலி நகைகள் என்பதற்கு உபகரண ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. புதிய மேலாளர் மேல் எந்த புகாரும் கொடுக்கவில்லை . தணிக்கை செய்யும் போது மொத்தம் மூவர் இருந்தனர். 1ம் எதிரி தணிக்கை செய்யும் போது யார் உடன் இருந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. காவல் துறையில் தணிக்கை ஆவணம் பற்றி தாக்கல் செய்யவில்லை . நான் சொல்வது போல் தணிக்கை எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல . எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.